களக்காடு ஒன்றியத்தில் புதிய ஊராட்சி

* 263 வினா.—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், களக்காடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பத்தை, பண்டிதன்குறிச்சி, வடகரை, மஞ்சுவிளை, கரிவேலன்குளம் போன்ற கிராமத்தை ஒன்றாக "பத்தை பஞ்சாயத்து" என்று தனியாக அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

Procurement price for paddy.

* 264 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the procurement prices for various varieties of paddy have been refixed during 1973; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) 1973-ல் நெல் கொள்முதல் விலையைத் திருத்தியமைப்பதற்கு முன்னர் இருந்த விலைகள் வருமாறு:—

மிக நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 56
நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 54
நடுத்தரம் குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 51
மோட்டா ரகம் குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 47

மேற்கண்ட விலைகள் 1973-ம் ஆண்டு மே திங்கள் 26-ம் நாளிலிருந்து

மிக நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 58
நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 56
நடுத்தரம் குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 53
மோட்டா ரகம் குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 49